# நேற்றிரவு கஜனை சந்தித்தேன்......!

நேற்றிரவு கஜன் என்னிடம் வந்தான். "எப்படி அபி இருக்கிறாய்?" நலம் விசாரித்தான். "பரவாயில்லை" என்றேன். "நான் இல்லாத ஒரு வருசம் எப்பிடிப் போனது?" தொடர்ந்தான். "பெரிதாக மாற்றங்கள் எதையும் கூறுவதற்கில்லை" என்றேன்.

வழமையான தனது புன்முறுவலோடு என்னை நோக்கினான். அதே ஆளுமையான கம்பீரம் – தீட்சண்யமான பார்வை – எதையும் சாதித்துவிடத் துடிக்கின்ற வேகம். அவன் கண்களில் இருந்து எனது கண்களை அகற்றிவிட முயன்றேன்.

"வா அபி ஒரு 'கபே' குடித்துவிட்டு வருவோம்" என்றான். கஜனுக்கும் 'கபே'க்கும் எப்போதும் நெருக்கமான உறவு இருந்து வந்ததை நான் அறிவேன். பல வேளைகளில் உணவு கூட அவனுக்கு 'கபே'யாகவே இருந்திருக்கின்றது. பிரான்ஸ் நாட்டில் பல கவிஞர்கள், அறிஞர்கள், சிந்தனை யாளர்களையெல்லாம் உருவாக்கியதில் இந்த 'கபே' விடுதிகளுக்கு பெரும் பங்குண்டு என எங்கோ ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம்.

'கஜன் – கபே பார்' மனதுக்குள் உச்சாடனம் செய்து கொண்டேன். ஒரு வருடமாகப் பிரிந்த வாழ்வு, கஜனின் ஆளுமை, ஆற்றல் என்பவை மேலும் அவனிடம் வளப்படுத்தப்பட்டிருந்த மையை நோக்கினேன்.

அரசியல், கலை, இலக்கியம், பொருண்மியம், புகலிட வாழ்வு, நாட்டு நிலைமை என பலதரப்பட்ட விடயங்களைப் பற்றியும் என்னோடு உரையாடினான்.

"நாட்டு நிலைமை எப்படி" என்றான்.

"வன்னியில் 'ஜெயசிக்குறுய்' தடுமாறுது" என்றேன். "ஓ, வெற்றி நிச்சயமா? இராணுவ நிலைகளை எதிர்வு கூற முடியாதுதான். ஆனாலும் இந்திய இராணுவத்தையே வெற்றிகண்ட வன்னிக்களம். வன்னிக் காடுகளெல்லாம் போராளிகளின் தோழனாக நிற்கின்ற களம். இராணுவத்திற்கு தோல்வி நிச்சயமே!" கூறிவிட்டு 'கபே'யை உறிஞ்சி இழுத்தான். சிறிய அமைதிக்குப் பின்........"மக்கள்தான் சரியாக் கஸ்ரப்படுகிறார்கள்" கூறிவிட்டு மீண்டும் அமைதியானான். "வன்னியில் மக்களின் நிலை மிகவும் மோசம்தான்" அமைதியைக் கலைத்தேன்.

"மக்களின் அவலத்தைப் போக்க உடனடியாக, ஏதாவது செய்தாக வேண்டும்" அந்த வார்த்தைகளில் தெறித்த நம்பிக்கையும், உறுதியும் எனக்குள் ஒருவித சிலிர்ப்பை ஏற்படுத்தியது. "அமெரிக்கா, விடுதலைப் புலிகளுக்கு தடைவிதித்துள்ளது, தெரியுமா!" என்றேன். ஆவலோடு அவன் பதிலுக்காய் காத்திருந்தேன்.

என்மீதில் ஒரு அலட்சியப் பார்வையை வீசினான். பின் சிரித்துவிட்டுக் கூறினான். "இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லையே!" அவனையே உற்றுப் பார்த்தேன். "உலகத்தில் நடந்த எந்த விடுதலைப் போராட்டங்களைத்தான் அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. சுதந்திர நாடான கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ இன்றுவரைக்கும் அமெரிக்கா வுக்கு பயங்கரவாதி. மண்டேலா தொடங்கி அரபாத் வரை எத்தனையோ விடுதலைப் போராட்டத் தலைவர்கள் எல்லாம் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெற்றவர்கள்தானே"

மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தான். பின் தொடர்ந்து, "ஆனாலும் இந்தத் திடீர் தடைக்குப் பின்னால் பல மர்மங்கள் மறைந்திருக்கக் கூடும்" புதிர் போட்டான். "என்ன சொல்கிறாய்" என்றேன். "ஆசியாவில் ஒரு இஸ்ரவேலாக சிறிலங்காவை உருவாக்க அமெரிக்கா முயல்கிறதுபோல" என்றான். நான் குழம்பிப் போனேன். "இந்தத் தடை ஒருவகையில் இந்தியாவுக்கு விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை" என்றான். "எப்படி" என்றேன்.



"தென்கொரியா, சீனா, யப்பான், இந்தியா என ஆசிய நாடுகளின் பொருண்மிய வளர்ச்சி அமெரிக்காவை திக்குமுக்காடச் செய்கிறது. தற்போது இந்தியா தொழில்நுட்ப ரீதியிலும் தன்னை மேம்படுத்திச் செல்கிறது. இந்த நிலையை எப்படி அமெரிக்கா பொறுத்துக் கொள்ளும். ஆகவே, ஆசியாவுக்குள் ஒரு பலமான தளம் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது."

தெளிவான உறுதியான அந்த வார்த்தைகளில் நான் ஈர்ந்து போனேன்.

"சரி அதை விடுவம். எங்கட ஆக்களின் கலை, இலக்கிய முயற்சிகளெல்லாம் எப்படி இருக்கு" விடயத்தை வேறு திசைக்கு மாற்றினான்.

"நீ இல்லாத இந்த இடைவெளியில் புலம்பெயர்ந்த தமிழ்க் கலைஞர்களின் திரைப்பட முயற்சியும் எங்கோ இடம்பெயர்ந்தோ, ஓய்வு நிலையினை அடைந்துவிட்டது" என்றேன்.

"ஏனடாப்பா இந்நிலை நல்லதில்லையோ" என்றான். பின் சிறிது யோசித்துவிட்டுக் கூறினான்.

"எமது பேனாக்கள் குப்பைகளின் வெளிவருதலுக்குத்தான் எதிரியே அன்றி கலைஞர்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு என்றுமே தடையாக இருக்க முடியாது. புலம்பெயர்ந்த கலைஞர்களின் திரைப்பட முயற்சியில் நிலவும் மந்தநிலை ஏன் என்று ஆராய வேண்டும். திரைப்பட சார்புக் கலைஞர்கள் அனைவரையும் அழைத்துக் கலந்துரையாட வேண்டும்" என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு 'கபே'க்கு அழைப்பு விடுத்தான். 'புகலிடத் தமிழ் திரைப்படம் – கஜன்' தமிழ் திரைப்பட வரலாற்றில் நிச்சயம் குறிக்கப்பட வேண்டியது. நான் எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

"எம்மவரின் இலக்கிய முயற்சிக ளெல்லாம் எப்படிப் போகிறது" என்றான். 'எல்லா நிகழ்ச்சிகளுக்கும் போக வேண்டும். எல்லாவற்றிலிருந்தும் தேட வேண்டும். எங்களுக்கு எதிரிகளென்று யாருமில்லை. எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். விடுதலைப் புலிகள் என்பது தற்போது ஒரு தனி இயக்கம் அல்ல. அது ஒரு அரசு. அது ஒரு மக்கள் சக்தி.'

கஜன் அடிக்கடி கூறிக்கொள்வதை என்னுள் இரைமீட்டுக் கொண்டேன்.

அண்மையில் ஒரு இலக்கியவாதிகளின் ஒன்றுகூடலுக்கு போயிருந்ததைப் பற்றி அவனிடம் பேசினேன். "ஓ, இலக்கியச் சந்திப்பா? எத்தனையாவது சந்திப்பு" என்றான். "23வது போலும்" என்றேன். "முதலாவது சந்திப்பில் பேசிக் கொண்டவைகளையே இப்பொழுதும் பேசிக் கொண்டிருந்திருப்பார்கள்" என்றான்.

"உண்மைதான். உலக இலக்கியங்கள், மாக்சிசம், கம்யூனிசம், சோசலிசம், பெண் விடுதலை தொடர்ந்து...... தொடர்ந்து.....புலி எதிர்ப்பு"

"புலி எதிர்ப்பா......?"

"ஆம். இலங்கையில் நடப்பது தேசிய விடுதலைப் போராட்டமே அல்ல. தமிழர் பிரச்சினைக்கு பாட்டாளி மக்கள் புரட்சி மூலமே தீர்வு காண முடியும். அங்கு பாட்டாளிகள் இல்லாவிட்டாலும் பாட்டாளி உணர்வுடையவர்கள் இருப்பார்கள். இன்னும்......இன்னும்....."

"பாவம் அவர்கள் வேறொரு உலகத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அவர்கள் போக்குக்கு விட்டுவிட வேண்டியதுதான். அங்கும் ஏதாவது நல்லவை கிடைத்தால் அவற்றை பற்றிக் கொள்ள வேண்டியதுதான்."

தனது பாணியில் சர்வசாதாரணமாகக் கூறினான்.

"ஈழமுரசு வேலைகளெல்லாம் எப்படிப் போகிறதுடாப்பா.....?" தான் நாட்டிய விதை பற்றி ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் கேட்டான்.

ஈழமுரசு – அதுதான் கஜன் என்ற ஆளுமையை வெளியுலகத்திற்கு வெளிப்படுத்திய சாதனம். ஈழமுரசை உருவாக்கி அது வளர்ந்தபோது கஜனும் புதிய பரிமாணத்துடன் வளர்ந்தான். அபாரமான, அசாதாரணமான வளர்ச்சிதான். எப்படி முடிந்தது! இப்போதும் என்னுள் கிளர்ந்து நிற்கும் கேள்வி. ஈழமுரசினால் எவ்வளவோ சாதிக்க முடியும் என்றான். சிலவற்றைச் சாதித்தும் காட்டினான். மானிட நேயம் கொண்டு தனது சுதந்திரச் சிறகினை அகல விரித்து பலரையும் அரவணைத்துக் கொள்ளத் துடித்தான். கஜன் பற்றி என்னுள் எழுந்த சிந்தையிலிருந்து மீள நினைத்தேன்.

"என்ன கேட்டாய்! ஈழமுரசு வேலைகளா?" நான் மீண்டும் சுயநினைவுக்கு வந்தவனாய் கேட்டேன். தொடர்ந்து "வேலைகள் நடக்கிறது. ஆனாலும் உனது அந்த ஆளுமையான இருக்கை இன்னும் வெற்றிடமாகத்தான் இருக்கு" என்றேன்.

"இல்லை. வெற்றிடம் என்பதே எமது விடுதலைப் போராட்டத்தில் இருக்க முடியாது" என்றான் உறுதியாக. நாவில் ஒருவித இறுக்கமும் ஆத்திரமும் தொனித்ததை அவதானித்தேன். சிறிது அமைதிக்குப் பின் மீண்டும் கூறினான்.

"இழப்புக்கள், இன்னும் வீச்சுடனும் மூச்சுடனும் இலக்கை நோக்கிய பயணிப்புக்கு உந்து சக்தியாக அமைய வேண்டும்" என்றான்.

"நேரமாகிறது. இன்றிரவு யேர்மனிக்குப் போகவேண்டும்" என்றான்.

நான் கண்களை விழித்தேன்.

~அபிநயப்பிரியன்.